**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE-1, TAMBARAM**

| C.C. No. | 99/2026 | LW : | 3 | PW : | 2 |
|---|---|---|---|---|---|
| Name : | Tmt.Sasikala | Age : | 35 | | |
| Father's Name/ Husband's name : | Tr.Anand | Designation: | | | |
| Address : | No.1, Thalapathi cross street, Karumariyamman Kovil backs side, Bharathi nagar, New Perungalathur. | District : | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act,1969 on the day of 24.06.2026 (Accused present).

**முதல் விசாரணை—**

1.நான் பெருங்களத்தூரில் வசித்து வருகின்றேன். கடந்த 7.11.2025 ஆம் தேதி அன்று எனக்கு சொந்தமான வாகன பதிவு எண்: டி என் 11 பி எம் 3514 டிவிஎஸ் ஜஸ்ட் என்ற வைக்கலை என்னுடைய கணவரின் நண்பர் திரு.யுவராஜ் என்பவர் கடைக்கு செல்வதாக இரவு 8 மணிக்கு எடுத்துக் கொண்டு புது பெருங்களத்தூர் பெருமாள் கோவில் அருகே இருக்கும் நியூ சாந்தி காய்கறி கடைக்கு முன்பாக நிறுத்திவிட்டு அவர் பொருள் வாங்கிக் கொண்டு திரும்ப வந்து பார்க்கும் பொழுது வாகனத்தை காணவில்லை என்று கூறினார்.

2.மேற்படி வாகனம் காணவில்லை என்று தொலைபேசி மூலமாக என்னுடைய கணவருக்கு தகவல் தெரிவித்து அதன் பேரில் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது மேற்படி புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

3.அதன் பின்னிட்டு காவல் நிலையத்தில் எங்களது வாகனம் கிடைக்கப்பெற்றது என்று தகவல் கூறினார்கள்

4.மேற்படி வாகனத்தை பெறுவதற்காக இந்த நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்து மேற்படி மனுவானது அனுமதிக்கப்பட்டது.

5. மேற்படி மனு அனுமதிக்கப்பட்ட பின்பு என்னால் தகுந்த பிணையம் கொடுக்க முடியவில்லை என்று பொருள் வாங்கவிய இயலவில்லை.

6. மேற்படி வாகனம் தொலைந்தது குறித்து போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

7.என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வாகனம் தான் என்னுடைய வாகனம் மேற்படி வாகனத்தின் உரிமையாளர் என்பதால் சான்று பொருள் குறியீடு செய்ய வேண்டும் என்று அரசு தரப்பில் கேட்டுக் கொண்டதற்காக புகைப்படம் கொண்டு மேற்படி வாகனம் அசாபொ 1 குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது கணவரின் நண்பர் தான் எடுத்துச் சென்று வாகனம் தொலைந்தது என்று எங்களுக்கு தகவல் தெரிவித்தார் என்றால் சரிதான்.

2. எந்த எதிரியால் திருடப்பட்டது என்பது குறித்து ஏதாவது தெரியுமா என்றால் எனக்கு எதுவும் தெரியாது.

3. எனது கணவரின் நண்பர் பெயரில் வேறு ஏதாவது வழக்கு உள்ளதா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

4. அவரே வாகனத்தை வேறு எங்க வைத்து விட்டு தொலைந்து விட்டது என்று உங்களிடம் பொய்யான தகவலை கூறியதன் பெயரில் நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

ஒப்பம் /G.செந்தமிழ் செல்வன்
நீதித்துறை நடுவர் எண்–1
தாம்பரம்